Regd. No. M. 4593. KUDI ARASU 12பக்கங்கள்

குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மலர் 18 சனி, 5-5-1945 சித்திரை-மீ 23உ இதழ் 30

சென்னை சர்க்காரின் யுத்தபிற்கால 5-ஆண்டு திட்டங்கள்

6 MAY 45

8-ஆம் வகுப்புவரை கட்டாய இலவச படிப்பு

பல புதிய ஆராய்ச்சிசாலைகள்

★

யுத்தப் பிற்கால புனரமைப்பு திட்டங்களைக் குறித்து 1944 ஆகஸ்டில் சென்னை கவர்னரால் அமைக்கப்பட்ட கமிட்டியின் சிபார்சுகளை ஒட்டி சென்னை சர்க்கார் ஒரு 5-வருட திட்டத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

இத்திட்டப்படி 5-வருஷத்தில் உத்தேசமாக $142\frac{1}{2}$ கோடி ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது. செலவு $136\frac{1}{2}$ கோடி ரூபாய் எனத் திட்டம் போடப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தை நிறைவேற்ற கீழ்க்கண்ட 5 துறைகளிலிருந்து பணம் எதிர்பார்க்கப் படுகிறது.

அதாவது:

1. ரெவின்யூ ரிசர்வ் நிதி.
2. சேமிப்பு உபரிகள்.
3. கடன்கள்.
4. பொது மராமத்து உபரிகள்.
5. இந்திய சர்க்காரின் மானியங்கள்.

ரெவின்யூ ரிசர்வ் நிதியிலிருந்து ரூ. 25 கோடி ரூபாயும், 5 வருஷ ரெவின்யூ உபரி ரூ 15 கோடி ரூபாயும், பயன் தரத்தக்க வேலைகளுக்கான கடன் மூலம் ரூ. 15 கோடியும், இரவலைக் கடன்கள் மூலம் ரூ. 30 கோடியும், பொது மராமத்துப் பாக்கிகள் மூலம் ரூ $7\frac{1}{2}$ கோடியும், இந்திய சர்க்கார் மானியம் மூலம் ரூ. 50 கோடியும், ஆக மொத்தம் ரூ. $142\frac{1}{2}$ கோடிரூபாய் கிடைக்குமென்று உத்தேசமாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.



சென்னை கவர்னர் சர் ஆர்தர்ஹோப்

போருக்குப் பின் விலை, கூலி நிலைமை எப்படியிருக்குமென்று திட்டமாகச் சொல்ல முடியாமையாலும், இப்போது நடைபெறாதசில திட்டங்களுக்குப் பணம் வேண்டியிருப்பதாலும் இந்தப் பணத்தில் ரூ. 6 கோடியை ரிசர்வ் நிதியாக ஒதுக்கிவைத்து மீதி ரூ. $136\frac{1}{2}$ கோடியை திட்டத்திற்காக உபயோகிக்கப்படும்.

திட்டம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

தொழிற்கல்லூரிகள்

முதல் பிரிவில் சில விசேஷத் திட்டங்கள் உள்ளன. அவைகளில் சில சர்க்காரால் ஏற்கனவே அனுமதிக்கப் பட்டிருக்கின்றன. அவசியமான பொருள்கள், கருவிகள் கிடைத்தவுடன் வேலை துவக்கப்படும்.

விசேஷத் திட்டங்கள் யாவும் அமுலுக்குக் கொண்டு வருவதற்கு பயிற்சிபெற்ற ஆட்கள் தேவை. இவர்கள் இல்லாமல், எந்த பெரிய திட்டமும் அமுலுக்குக் கொண்டுவருவது முடியாது. இத்திட்டத்தின்படி இரண்டு புதிய இஞ்சினியரிங் கல்லூரிகளும், ஒரு புதிய வைத்திய (மெடிக்கல்) கல்லூரியும், மற்றுமொரு விவசாய கல்லூரியும், பலதரப்பட்ட தொழிற் கல்விச் சாலைகளும் நிறுவுவது, வேலூரில் மறுபடியும் பழைய காட்டுக்கல்லூரியைத் திறப்பது, சென்னை அரசாங்க வைத்தியக் கல்லூரியை விஸ்தரித்தல் முதலியவைகளும் அடங்கியுள்ளன.

ஆனாலும், 5 வருடங்களுக்கு முன் இக்கல்லூரிகளின் பயிற்சி

ராஜா முத்தையா

பெறுவோரால் சர்க்காருக்குப்பயன் கிடைக்காததாலேயால். இப்போதுள்ள கல்வி ஸ்தாபனங்களிலேயே பயிற்சி காலத்தைக் குறுக்கி அதன் மூலம் வெளி வரும் தொழில் கல்வியினரையும் யுத்த சேவையிலிருந்தவரும் பயிற்சி பெற்றவர்களையும் சேர்த்துக்கொள்ளப்படும்.

யுத்தத்திலிருந்து திரும்பியவர்களுக்கு

இந்த விசேஷத் திட்டங்களில் இரண்டு யுத்த சேவையிலிருந்து வந்தவர்களுக்கு என்று ஒதுக்கப்படும்.

முதலாவதாக மாகாணத்தின் பல் வேறு பகுதிகளில் 50 விவசாயக் குடியிருப்புகள் கூட்டுறவு முறையில் அமைத்துத் தரப்படும். அந்த 50 காலனிகளில் இருப்பவர்கள் யாவரும் கூட்டுறவு சங்கங்களில் மெம்பர்களாக இருக்கவேண்டும். தனிப்பட்டவர்களுக்குக் காலனியில் நிலம் தரப்படமாட்டாது. இத்திட்டத்தில் 9000 பேர்களுக்கு இடமளிக்க உத்தேசம்.

இரண்டாவதாக, மேஜை, நாற்காலி சாமான்கள், மெஷின் கருவிகள், தோல் சாமான்கள் உற்பத்தி செய்வதற்கான 10 ஜில்லா கோவாப்பரேட்டிவ் ஒர்க்ஷாப்புகள் திறந்து இவைகளில் மாஜி சிப்பாய்கள் நியமிக்கப்படுவார்கள். இதன் மூலம் 3000 டெக்னிஷியன்களுக்கு வேலை கொடுக்க உத்தேசம்.

இவ்விரண்டு திட்டங்கள் சம்பந்தமாக ஆரம்ப நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. படை கலைக்கப் படுவதற்கு முன் இவ்விரு திட்டங்களும் துவக்கப்படவேண்டும் என சர்க்கார் விரும்புகின்றார்கள்.

அதோடு ரோடு, பொது மராமத்து, நீர்ப்பாசனம், பொது சுகாதாரம், மின்சார வேலைத் திட்டங்களில் யுத்த சேவையிலிருந்து விடுபட்டவர்களை, கூட்டுறவு முறையிலும், மற்றபடியும் நியமிக்கவும் சர்க்கார் தயாராக இருக்கிறார்கள்.

திட்டத்தின் இரண்டாவது மூன்றாவது பகுதிகளில் எல்லா மாகாணத்திட்டம் என்றும் குறிப்பிட்ட பகுதித்திட்டம் என்றும் இரண்டு பிரிவுகள் அடங்கியிருக்கின்றன.

பிரதேசங்களைப் பொறுக்கியெடுப்பதில் சர்க்கார் பல விஷயங்களைக் கவனித்திருக்கிறார்கள். மண், நீர், கன்சர்வேஷன் திட்டத்தை விசாகப்பட்டணம் ஜில்லாவிலும் சிடெட் ஜில்லாவின் ஒரு பகுதியிலும் முதல் 5வருஷத்தில் நடத்தி அதன் பிறகு மிகவும் அவசியமான பிரதேசங்களுக்கு விஸ்தரிக்கிறார்கள்.

விவசாய அபிவிருத்தி

மாகாணத்தின் விவசாயம், காடுகள், கால்நடை, மீன்பிடிக்கும் வசதிகள், முத்துக்குளித்தல் இவைகளை விஸ்தரிக்க மொத்தம் ரூ. 12 கோடி செலவாகும். நல்ல ரகமான தான்ய விதைகள் விநியோகம், விவசாயக் கருவிகள், எருக்கள், தழைகள் முதலியவைகளைக் குறைந்த விலைக்குக் குடியானவர்களுக்கு கொடுப்பது இவைகளுக்கும் விவசாய ஆராய்ச்சிப் பிரசாரம், கண்காட்சி கூட்டுறவு விற்பனை இவைகளுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.

பெல்லாரி, விசாகப்பட்டணம் ஜில்லாக்களில் நிலம் பயனற்றுச் சோர்ந்து போவதைத் தடுக்க கரைகள் கட்டவும், குழிகள் வெட்டவும் திட்டம் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. இவ்வாறு வருஷம் 2,00,000 ஏக்கர் வீதம் இம்முறையான பண்பாடு செய்தல் வருஷ தான்ய வருமானம் 10000 டன் அதிகரிக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

கால்நடைப் பண்ணைகள்

கால்நடைப் பண்ணைகள் ஏற்படுத்தி 8 வருஷங்களுக்குள்ளாக லட்சம் எருதுகளும், ஓங்கோல், காங்கயம், ஹலிக்கார் பசுக்கள் ஒரு லட்சமும் உற்பத்தி செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு சர்க்கார் கால்நடை வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்தி அங்கு 50 பசுக்களும் பொலி காளைகளும், ஆடு கோழிகளும் வளர்க்க உத்தேசிக்கப்பட்டு, இதரகான முறையிலும் முயற்சி செய்யப்பெறும். மேற்கொண்டு மிருக வைத்திய உதவியளிப்பது, அது சம்பந்தமான அதிகாரிகள், ஆராய்ச்சிசாலைகள் நிறுவுவதுபற்றியும் திட்டத்தில் வழி செய்யப்பட்டிருக்கிறது.

காடுகள் விஸ்தரிப்பு

சென்னை மாகாணத்தில் காடுகள் விஸ்தரிப்பதுபற்றியும் விசேஷ திட்டங்கள் போடப்பட்டுள்ளன. இப்பொழுதுள்ள காடுகளை சர்க்கார் ஆதீனத்தில் கொண்டுவந்து மேலும் புதிய காடுகளை உற்பத்திசெய்து, பாதுகாக்கவும், சவுக்கு, தேக்கு முதலிய மரங்களை அபிவிருத்தி செய்யவும் காட்டு ரோடுகளை சீர்திருத்தியமைக்கவும் திட்டங்கள் உள்ளன.

ஐந்தாண்டில் நிலம் கரைந்து போகாமல் சாரமற்றுப் போகாமல் பாதுகாக்க திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன.

பிஷரி இலாகா விஷயத்தில் அதாவது சிப்பந்தி நிர்வாகமும் ஆராய்ச்சி ஸ்தாபனமும் விஸ்தரிக்கப்படும். இதில் போட்டுகள் வாங்கி, முத்து, சங்கு இருவகையிலும், ஐஸ் பாக்டரிகள் மீன் உணவு, மீன் எரு உற்பத்தி முறைகளை விளக்கும் காட்சி சாலைகள், மீன் வளர்ப்புப் பண்ணைகள், இவைகள் ஏற்படுத்துவதிலும் பல திட்டங்கள் நடத்தப்படும். மீன் பிடிக்கும் சமூகத்திற்கு மேற்கொண்டு அதிக பள்ளிக்கூடங்களும் ஆசிரியர்களும் அளிக்கப்படும்.

பல சிறு திட்டங்கள் சர்க்காரால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. 'அதிக உணவு உற்பத்தி' என்ற முயற்சியின் கீழ் இந்திய சர்க்கார் சில திட்டங்களுக்கு சிறிது மான்யம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

நீர்ப்பாசனத் திட்டங்கள்

1945-46 முதல் ஐந்து வருஷங்களில் இப்போதுள்ள டெல்ட்டா பிரதேசங்களில் நீர்க்கழிவு முறைகளின் மூலம் அங்குள்ள விளைவை அதிகமாக்கவும் சர்க்கார் நோக்கங்கொண்டிருக்கிறார்கள். துங்கபத்ரா, கீழ்பவானி, கண்டிகோட்டை நீர்த்தேக்கம், வைகை நீர்த்தேக்கம், மேல் பண்ணையாறு, மாலம்புழா போலாவரம் நீர்த்தேக்கம் ஆகிய இந்த 7 பெரிய திட்டங்களையும் பல சிறிய திட்டங்களையும் நடத்த உத்தேசம். போலாவரம் நீர்த்தேக்கம் முடிந்தால் இந்தியாவிலே அது பெரிய நீர்ப்பாசனத் திட்டமாக விளங்கும். இத்திட்டம் முடிவுற 15 வருடங்கள் ஆகும். சுமார் 50 கோடி ரூபாய் பிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் பிரபல அமெரிக்க இஞ்சினீயரான தோழர் சாவேஜ் என்பவரால் தயாரிக்கப்பட்டது. நல்ல வருமானமுள்ளதாக இருக்கும். முதல் 5 வருஷத்தில் நீர்ப்பாசனத்திற்காக ரூ 27½ கோடி செலவழிக்க ஏற்பாடு ஆகியிருக்கிறது.

மின்சார வசதி

துங்கபத்திரை நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சார உற்பத்தி செய்வதன் மூலம் சிடெட் ஜில்லாக்களில் தொழில்கள் ஏற்படும். இந்த ஜில்லாக்களில் மூலப்பொருள்கள் ஏராளமாகக் கிடைத்தாலும், இந்த விஷயத்தில் மற்ற ஜில்லாக்களைவிட இந்த ஜில்லா குறைபாடுடையவைகளாகவே இருந்து வருகின்றன.

இப்பகுதியில் தொழில்நிலையங்கள் ஏற்படுவதால், அப்பிரதேசத்தின் நிலைமை பொருளாதாரத் துறையிலும் பொதுவாகவும் அபிவிருத்தியடைய நேரிடும்.

இம் மாகாணத்தின் எதிர்காலத் தொழில் அபிவிருத்தியின் போக்கு குறைந்த சார்ஜில் மின்சாரச் சக்தி கிடைப்பதைப் பொறுத்திருக்கிறது. இத் துறையில் யுத்தத்திற்கு முன் எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் பட்டும் தலைக்கு 7.5 கிலோ வாட்ஸ் தான் மின்சாரம் செலவாகிறது; ஆனால் பக்கத்திலுள்ள மைசூர் சமஸ்தானத்திலோ தலைக்கு 49.5 கிலோ வாட்ஸ் செலவாகிறது.

இத்திட்டத்தில் கண்டுள்ள விசேஷத் திட்டங்கள் என்பவைகள் எல்லாம் யுத்தம் இல்லாதிருந்தால், இதற்குள் செய்து முடிக்கப்பட்டிருக்கும் அல்லது வேலை நடந்துகொண்டாவது இருக்கும்.

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

தமிழ் மொழி எப்படி உயர்வடையும்

★

(ஒரு தமிழபிமானி)

நம் நாட்டில் இப்போது தமிழ் மொழிக்கு ஆக என்று வைக்கப்பட்டிருக்கும் பள்ளிகள், கல்லூரிகள் என்பவை எல்லாம் தமிழ் மொழியின் பேரால் ஆரிய மதத்தை அல்லது புராண மதத்தைப் படிப்பிக்கும் மதப் பாடசாலை (மதப் பள்ளி)களேயாகும். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் அவைகளை சைவ மதப் பள்ளி என்றே சொல்லிவிடலாம்.

உதாரணம் வேண்டுமானால் மறைமலை அடிகள், கா. சுப்பிரமணிய பிள்ளை, கதிரேசசெட்டியார், கல்யாணசுந்தர முதலியார், மீனாட்சிசுந்தரம் பிள்ளை, காலம் சென்ற வெங்கிடுசாமி நாட்டார் முதலிய தமிழ் பண்டிதர்கள் என்று பெயர் வாங்கியிருக்கும் இந்த அறிஞர்யாருக்காவது தமிழ், தமிழ் மொழி; தமிழ் எழுத்து, தமிழின் இயற்கை, தோன்றல், வளர்ச்சி ஆகியவைகளைப் பற்றிய ஞானம் என்பதில் ஏற்கனவே உள்ள இலக்கிய இலக்கணங்கள் என்பவைகளை நெட்டுரு செய்திருப்பதல்லாமல் அதற்குக் கருப்பொருள் கூறுவதல்லாமல் தனி ஞானம் உண்டு என்று யாராவது சொல்ல முடியுமா? இவர்கள் யாவரும் 'தமிழ் சிவன் தந்தான்' 'அகத்தியன் இலக்கணஞ் செய்தான்' என்பதில் ஆரம்பித்தது, 'தமிழ் உயர்தனிச் செம்மொழி' என்பதோடு முடிவுரை கூறி தமிழ் பக்தர்களாகி, தமிழில் வல்லவர்கள் எனப் பேர் பூண்டு மதம், புராணம், இதிகாசங்களுக்கு அடிமைகளாகவும், பிரசாரகர்களாகவும் விளங்குகிறார்கள் என்பதல்லாமல் தமிழ் அதாவது தமிழ் இலக்கியம், தமிழ் மொழி, தமிழ் ஒலி, தமிழ் எழுத்து என்பவைகளில் வல்லவர்களாக யாராவது விளங்குகிறார்களா என்று கேட்கிறோம்.

தமிழ் சிவன் தந்தான், அகத்தியன் இலக்கணம் செய்தான் என [illegible] இவர்கள் நம்பிக்கைகொண்டார்களோ அன்றே இவர்களது தமிழ் அறிவுக்கு முற்றுப்புள்ளி ஏற்பட்டுவிட்டது. அதனால்தான்—அதனாலேயேதான் தமிழுக்கு கல்வெட்டு எழுத்துக்காலம் முதல் நாளதுவரை அந்நியநாட்டாரால் அந்நிய சமயத்தவரால் ஏற்பட்ட சில மாறுதல்கள் தவிர, சைவரால் சைவ (தமிழ்) பண்டிதரால் ஒரு சீர்திருத்தமும் ஏற்படாமல் நாளுக்குநாள் தமிழ் ஒரு சமயப் பெருமையைமட்டும் பெற்று விளங்கக்கூடியதாகி விட்டதே ஒழிய ஒரு மொழிப்பெருமை இலக்கியப் பெருமை உடையதாக இல்லை.

1000 வருஷம், 500 வருஷங்களுக்கு முன் "கடவுள் அருள் பெற்று" அதாவது மற்ற எந்த மனிதனுக்கும் இல்லாத தனி யோக்கியதை 'கடவுள் அருள்' பெற்று ஏதோ ஆரியர்—தமிழர்களின் பழைமைவர்களுக்கு அனுகூலமாய் கூறி விட்டுப் போன ஆபாச அறிவுச் செவ்வாத களஞ்சியங்களைவிட மனித சமுதாய உயர்வாழ்வுக்குத் தகுந்தது என்பதாக எவருமே ஒன்றுமே காண்பதற்கில்லாமல் இருந்து வருகிறது.

பெர்னாட்ஷா, H. G. வெல்ஸ், பெட்ரண்ட்ரசல் முதலியவர்கள் போல ஒரு அறிஞரும் இன்றும் இல்லை தமிழரில். பல நூற்றாண்டுகளாகவும் இல்லை. ஆனால் இந்நாட்களில் நெட்டுருப் போட்டவர்களுக்கும், சமய வேஷம் பூண்டவர்களுக்கும், செல்வவான்கள் பார்ப்பனர்கள் ஆதரவு பெற்றவர்களுக்கும், பட்டங்களுக்கும், பதவிகளுக்கும்; விளம்பரங்களுக்கும் குறைவில்லாமல் இருந்துவருகிறது. இம்மாதிரி தகுதி அற்றவர்கள் புகழும் விளம்பரமும் சம்பாதித்திருப்பதே தமிழின் ஈனநிலைக்கு சரியான எடுத்துக்காட்டாகும். இந்த நிலைமை இருந்தால் தமிழ் வெகு சீக்கிரத்தில் கீழ் நிலையை இன்னமும் கீழ் நிலையை அடையப் போகிறது என்பதில் சந்தேகப்படவேண்டியதே இல்லை.

ஆதலால் தமிழில் பற்றுள்ளவர்கள் சமயப்பற்று, அதாவது சமய சம்மந்தமான இலக்கிய இலக்கண சம்மந்தம் அற்ற முறையில் ஒரு தமிழ் பள்ளியோ கல்லூரியோ ஏற்படுத்தவேண்டும். மடாதிபதிகள் உதவி சிறிதும் பெறாமல் தனித்தமிழ் பற்றுள்ளவர்கள் ஆதரவிலேயே நடத்தப்படவேண்டும். அப்பொழுது சகல துறைகளிலும் வல்லமை பெறத்தக்க தமிழ் அறிஞர்கள் தோன்றுவார்கள். இன்று தமிழ் பண்டிதர்களில் அனேகருக்கு தமிழ்ப்படித்ததாலேயே பகுத்தறிவு தேய்ந்துபோய்விட்டது என்றால் இதை சுலபத்தில் ஆட்சேபிக்க முடியாது. வாலிப பண்டிதர்கள் இவற்றை கவனித்து உண்மையான தமிழ் பண்டிதர்களாக—தமிழ் வல்லவர்களாக—தமிழை சீர்திருத்தி மேம்படுத்துபவர்களாக ஆகவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

தோழர் கா. சு. மறைவு.

(நமது நிருபர்)

திருநெல்வேலி, மே 3—

தோழர் கா. சுப்பிரமண்ய பிள்ளை எம். ஏ., எம். எல்., அவர்கள் சிறிது கால மாக நோய்வாய்ப்பட்டிருந்து சென்ற 1-5-45-ல் திருநெல்வேலியில் இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலக்கற்கண்டார் கோட்டை திராவிடர் கழகம்

முதலாவது ஆண்டுவிழா

13-5-45ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு மேற்படி திராவிடர் கழக முதலாவது ஆண்டுவிழா திராவிடர் கழக மைதானத்தில் தோழர் சனார்த்தனம் பி. ஏ., அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அதுசமயம் தோழர்கள், இரா. நெடுஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்), க. அன்பழகன், தவமணி இராசன், இன்னும் மற்றத் தோழர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

போர்வாள்

தோழர் சி. பி. சின்னராசு அவர்களை அமைப்பாளராகக்கொண்ட திராவிட சீர்திருத்த நாடக சபையாரால் ஈரோடு ராயல் தியேட்டரில் [illegible] மே மாதம் 11, 12, 13 ஆகிய மூன் நாட்களும் போர்வாள் நாடகம் நடைபெறும்.

ஈரோட்டில் மாணவர் பயிற்சி முகாம்

4-5-45 காலை ஈரோட்டில் பெரியார் மாளிகையில் திராவிட மாணவர் பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டது. பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் தோழர் டி. பி. வேதாச்சலம் பி. ஏ., தொடங்கிவைத்தார்கள். மாலையில் பல அறிஞர்கள் விரிவுரையாற்றினார்கள். இதுவரை இப்பயிற்சியில் கலந்துகொள்ள வந்துள்ளவர்கள்:- தோழர்கள் புலவர் கி. ஆ. பெ. சாமி, புலவர் நா. மு. மாணிக்கம், புலவர் அ. வீரவாகு, புலவர் பி. குழந்தையா, புலவர் ஆர் எழில் நிலவன், ஏ. பி. சனார்த்தனம், கே. தவமணி இராசன், ஈ. வி. கே. சம்பத், புலவர் மா. நன்னன், க. அ. மதியழகன், இரா. இளம்வழுதி, ப. திருஞான சம்பந்தம், எம். விட்டல், ஆர். கப்பையன், கே. இராவணன், எஸ். சுந்தரமூர்த்தி, க சண்முகம், வி. பி. அண்ணல்தங்கோ, கே. என். இளஞ்செழியன், சு. இராமசாமி, ஆர். வில்லாளன், எம். ஜி. ராசன், ஆர். ராமையன், வி. செங்குட்டுவன், எஸ். கருணானந்தம் ஆகியோர்.

* *

மேமாத முதல் செயக்கொண்ட சோழபுரம் தாலுகாவின் பல கிராமங்களிலும் விருத்தாசலம், திட்டைக்குடி, சின்னச்சேலம் கல்லக்குறிச்சி ஆகிய இடங்களிலும் நம் திராவிட மாணவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். இந்த வட்டாரத்தில் ஏனைய இடங்களில் கூட்டம் நடத்த விரும்புவர்கள் தோழர் சி. முனிசாமி எம். ஆர். தாசு அண்டுகோ, சைக்கிள் கடை, விருத்தாசலம்.

* *

மே மாதம் 8-ந் தேதி கடலூர் ஓ. டி மாலுமியார்பேட்டை, வண்டிப்பாளையம், திருப்பாதிருப்புலியூர், குறிஞ்சிப்பாடி, பரங்கிப்பேட்டை, இருவிக்குப்பம், புதுப்பேட்டை முதலிய இடங்களிலும், திண்டிவனம் வட்டத்தில் பல கிராமங்களிலும், அவலூர்பேட்டை சுற்றுக் கிராமங்களிலும் நமது தோழர்கள் சுற்றுப் பிரயாணம் வருகிறார்கள் இன்னும் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யும் தோழர்கள்.

ஆ திராவிடமணி பி. ஏ., திராவிடர் கழகம், கடலூர், ஓ. டி. என்ற முகவரிக்கு எழுதவும்.

* *

செல்லிக்குப்பம் விருத்தாசலம் ஆகிய இடங்களில் தோழர் ஏ. பி. சனார்த்தனம் கலந்துகொள்ளலாம்.

* *

தஞ்சை மாவட்டத்தில் கீழ்க்கண்ட அறிக்கைப்படி கூட்டங்கள் நடைபெறும்.

9-4-45 பின்னவாசல்
10-5-45 அழிவேனி
11-5-45 புலிவலம்
12-5-45 கிளரூர்
13-5-45 தேவூர்
14-5-45 ஆழியூர்
15-5-45 சிக்கல்
16-5-45 அந்தணர் பேட்டை (பஞ்சக்கொல்லை)
17-5-45 நாகை

மேலும் நாகை, நன்னிலம், திருத்துறைப்பூண்டி தாலுகாக்களுக்கு மாணவர்களை அழைக்க விரும்பும் தோழர்கள் கீழ்கண்ட முகவரிக்கு எழுதவும்.

வி. எஸ். பி. யாகூப், திராவிடர் கழகம், போஸ்டு விஜயபுரம், திருவாரூர்.

* *

நெல்லை மாவட்டத்தில் 8-ந் தேதி முதல் நமது மாணவத் தோழர்கள் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள்.

8-5-45, 9-5-45 தூத்துக்குடி. ஏ. டி. பன்னீர்செல்வம் சங்க ஆண்டுவிழாவில் தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் பி. ஏ., அவர்களும் கலந்துகொள்வார்கள்.

* *

மே மாதம் 8-ந் தேதி முதல் மதுரை மாவட்டத்தில் நமது கல்லூரி மாணவத் தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். கூட்டங்கள் நடத்த விரும்புவோர் தோழர் சி. முத்திருளாண்டி,

திராவிடர் கழகம், 55, புட்டுத் தோப்பு ரோடு, மதுரை.

* *

மே மாதம் 8-ந் தேதி முதல் சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் நடைபெறும். இச்சுற்றுப் பிரயாணத்தை தோழர் எம். எல். தமிழ்மணி, (திராவிடர் கழகம், செவ்வாய்ப்பேட்டை) நடத்துவார். கூட்டம் நடத்த விரும்புவர்கள் எழுதித் தெரிந்துகொள்ளவும்.

* *

கோவை மாவட்டத்தில் 8-ந் தேதி முதல் கூட்டங்கள் நடைபெறும். தோழர்கள் தவமணி இராசன், வீரமணி மற்றும் சிலர் கலந்து கொள்வார்கள். கூட்டங்கள் நடத்தவிரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

செயலாளர் திராவிடர் கழகம் ஈரோடு.

* *

ஏனைய மாவட்டங்களுக்கு அழைக்கும் தோழர்கள் நம் நிலையத்திற்கே எழுதவும்.

செயலாளர்,
திராவிடர் மாணவ
பிரசாரக் கழகம்,
ஈரோடு.

புதுக்கோட்டை இக்பால் இளைஞர் கழகம்

'ஐந்தாம் ஆண்டுவிழா'

பாஹேஸ் ஒலி தர்க்கா (ஜின்னா பார்க்) வில் 12-5-45-ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் $3\frac{1}{2}$ மணி முதல் 7 மணி வரையிலும், இரவு $9\frac{1}{2}$ மணி முதல் 12 வரையிலும் திருச்சி ஆலிஜனாப் ஒய். இஸ்மாயில் கான் பகதூர் எம். ஏ., எல், எல். பி., (Alig. S. T) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றவார்கள்.

மூன்று கடிகாரங்களும் 450 வெகுமதிகளும் (5 வருட உத்தரவாதம்)

ரூ. 3-10-0 விலையுள்ள பதிய நறுமண ஆட்டோரோஸ் ஒரே தடவையில் 3 புட்டிகள் வாங்குவோருக்கு இனாமாக ஒரு நிக்கல் கேஸ்டம்பி கைகடிகாரம், 1 டார்ச்லைட், 1 பவுண்டன்பேனா, 1 பிரஷ், 1 சோப், 1 சிறிய அலாரம் டின் பொம்மை மேஜை கடிகாரம், 1 பட்டன், 1 பேனாகத்தி, 4 கைகுட்டை, 1 கத்தரிக்கோல், 1 மோதிரம் மற்றும் 440 அழகான வெகுமதிகளும் அல்லது உறுதியான யந்திரங்களுடைய ஒரு பாக்கெட் கடிகாரம். பாக்கிங் தபால்சார்ஜ் 14 அணா பிரத்யேகம்.

THE IMPERIAL WATCH Co.,
P. B. No. 12211, Calcutta.
(K. D.)

ரோஜா முத்தையா

புதியமுறை கல்வி வேண்டும்

தோழர் ஜி. டி. நாயுடு அவர்களின் வற்புறுத்தல்

சென்ற கிழமை சென்னை சர்வகலாசாலை வைஸ்சான்சலர் டாக்டர் சர். லட்சுமணசாமி அவர்களுக்கு கோவையில் தமது மாளிகையில் தேநீர் விருந்தளித்து தோழர் ஜி. டி. நாயுடு அவர்கள் பேசுகையில் டாக்டர் முதலியார் அவர்களுக்கு சர் பட்டம் வழங்கியதுபற்றி மகிழ்ச்சி தெரிவித்துவிட்டு மேலும் பேசியதாவது:

இன்றைய கல்வி நாட்டின் தேவைக்கும் மக்களின் தேவைக்கும் ஏற்றதாகயில்லை. இதைக் குறித்து நம்மில் பெரும்பாலோர் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

கடந்த மூன்று நூற்றாண்டுகளாக பிரிட்டிஷ் ஆட்சி இந்நாட்டில் இருந்து வருகிறது. இக்காலத்தில் உலகில் வேறு பகுதிகளில் எவ்வளவோ புரட்சிகள் தோன்றி பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இந்நாட்டில் மட்டும் மாற்றமில்லை. அதிலும் குறிப்பாக கல்வித்துறையில் ஒரு சிறிதுமில்லை. கல்லூரிகளிலிருந்து வெளியேறும் மாணவர்கள் எதற்குப் பயன்படுகிறார்கள்? கல்லூரிகள் இயந்திரம்போல் மாணவர்களை வெளியேற்றுகின்றன. இவ்வாறு வெளியேறும் மாணவர்களின் யோக்கியதை யென்ன? குமஸ்தா வேலைக்கும் தனி பரீட்சை வைத்துத் தேர்ந்தவர்களைத் தானே பொறுக்கி எடுக்கவேண்டியிருக்கிறது?

14 வருஷம் பள்ளியிலும் கல்லூரியிலும் வாழ்நாளை செலவழித்துவிட்டு வெளியேறும் ஒருவன் வயலிலோ தொழிற்சாலையிலோ வேலை செய்யும் சாதாரண படியாத தொழிலாளியைவிட எந்தவிதத்தில் மேம்பட்டவனாகிறான்? உடல்வலுவாவது பெற்றிருக்கிறானா என்றால் அதுவுமில்லை. கல்லூரியிலிருந்து வெளியேறும் சராசரி மாணவனின் உடலுறுதியைவிட மோசமான உடலுறுதியுடைய வேறு மனிதனை உதாரணத்திற்குக்கூட எடுத்துக் காட்ட முடியாதென்றே நம்புகிறேன்.

படியாத தொழிலாளி அவனை வென்றுவிடுவான். காரணம் அவன் தொழிலின் உயர்வை அறிந்து அதனால் உடல் வலுவைப் பெற்றுத்திகழ்வதுதான். இதற்கெல்லாம் ஆதாரமில்லாமல் பேசவில்லை. நமது மாணவ மாணவிகள் கல்வியில் உயர உயர அவர்களின் பலம் உடலுறுதி குறைந்துகொண்டேபோகிறது. இதற்கு என்னிடம் புள்ளி விவரங்கள் இருக்கின்றன. எஸ். எஸ். எல். சி. வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகளின் எடை அதிகரித்துக்கொண்டேபோயிருப்பதையும் மேற்கொண்டு படிக்கப் படிக்க எடை குறைந்துகொண்டு வந்திருப்பதையும் காணலாம்.

எஸ். எஸ். எல். சி. படிக்கிற ஒரு பையனுடைய சராசரி எடை 110 பவுண்டாகவும் அவர் பி. எஸ்ஸி, பி. ஏ. பி. எஸ்ஸி. படிப்பதற்குள் 98 பவுண்டாகவும் குறைந்திருப்பதையும் அதிலும் மெடிகோ-இஞ்சினீயரின் எடையோ 88 பவுண்டாக ஆகிவிடுகிறதையும் காணலாம்.

சில நாட்களுக்கு முன்தான் இந்நகரில் ஒரு கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். மழைக்கும் பள்ளிக்கூடத்தின் வாசப்படியில் ஏறியறியாத ஒரு சென்னை சிப்பாய் கடந்த இரண்டு வருடங்களில் 7-பதக்கங்கள் பெற்றிருப்பதாகவும் ஒரு அதிகாரிகூட அவ்வளவு வாங்கினதில்லையென்றும் அக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. இதுஒன்றே போதாதா நமது கல்லூரி மாணவர்கள் பட்டதாரிகள் உடலுறுதியற்றவர்கள் என்பதை விளக்க. மேலும், நம்நாட்டு சமுதாயத்தில் படித்தவர்களாகிய 14 சத விகிதத்தினர் உடல் பலம் இல்லாத உதவாதவர்களாகிவிட்டார்கள் என்பதும் விளங்கும். அதோடு அப்பதினான்கு சதவிகிதத்தினரைக்காக்க மற்றொரு 14 சத விகிதத்தினர் தேவை ஏற்படுகிறது. ஆகமொத்த ஜனத்தொகையில் 28சத விகிதத்தினர் பயன்படாதவர்களாகி விடுகிறார்கள் இன்றைய கல்வி முறையினால்.

யுத்தத்திற்குப்பின் கல்வியைத் திருத்தி அமைப்பதுபற்றி பேசப்பட்டு வருகிறது. யுத்தத்திற்குப் பின் 100க்கு 100 பேர்களையும் கற்றவர்களாகச் செய்யப்போகிறார்களாம். இவ்வாறு 100க்கு 100பேர்களை கற்றவர்களாகச் செய்யும் வேலையும் இன்றைய

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

வெற்றி புலனாகிறது!

ஆனால்

ஜப்பானை இன்னும் முடிவாகத் தோற்கடிக்கவில்லை

★

அதிகமான நமது ஆட்களுக்கு
அதிகமான வசதிகள் தேவைப்படுகின்றன
ஆகவே கவர்னர் யுத்த நிதிக்கு
அதிகமான பண உதவி தேவைப்படுகிறது

ஆகவே

தயவுசெய்து உதவி புரியுங்கள்

மே. த. கவர்னர் யுத்த நிதி

துருப்புக்கள் வசதி நிதிக்கு உங்கள் உதவிப் பணத்தைக் குறிப்பிட்டு அனுப்பிவையுங்கள்

குடி அரசு

1945-ஆம் மே-மீ 5-உ

கவர்னர் சர்க்காரின் 5-வருட திட்டம்

சென்னை கவர்னர் சர்க்கார் சென்னை மாகாணத்திற்கு 5-வருட திட்டமாக போர் பிற்காலத் திட்டம் என்னும் போரால் வகுத்திருக்கும் திட்டம் போற்றக்கூடியதாகும்.

இத்திட்டம் நிறைவேற 136 கோடி ரூபாய் செலவழிக்கவும் முன்வந்திருக்கிறது. இதைப் பார்ப்பனர்களும் பார்ப்பன ஆயுதமாகிய காங்கரஸ்காரர்களும் தேசிய பத்திரிகைகளும் பொறாமையின் காரணமாக வெறுக்கலாம், குறை கூறலாம்.

ஆனால் பார்ப்பனர்களும், காங்கரஸ்க்காரர்களும், தேசியப் பத்திரிகைகள் என்பனவும், காந்தி கோஷ்டியும் எந்தெந்தக் காரியங்களை வெறுக்கவும் குறைகூறவும் முற்படுகிறார்களோ அந்தக் காரியங்களில் 100க்கு 99 காரியங்கள் நாட்டிற்கும் திராவிட மக்கள் சமுதாயத்திற்கும் நலமான காரியங்கள் என்பது நமது உறுதியான கருத்தாகும். பார்ப்பனர்களாலோ, காந்தியாராலோ, காங்கரசாலோ, தேசியப் பத்திரிக்கைகளாலோ இந்த நாட்டுக்கு இந்நாட்டு மனித சமுதாயத்திற்கு இவர்களது சரித்திரம், அறிமுகம், விளக்கம் தெரிந்த காலம் முதல் இன்றுவரை ஏதாவது ஒரு கடுகளவு நலமோ, முற்போக்கோ ஏற்பட்டதாக யாராவது ஒரு சிறு காரியத்தையாவது எடுத்துக்காட்டக்கூடுமானால் அது இந்த அபிப்பிராயத்தை சிறிதாவது மாற்றலாம். ஆகவே இந்தக் கூட்டம் மனித சமுதாய மனிதத் தன்மை வாழ்வுக்கு எதிர்ப்பானது ஆனதால் இந்த 5 வருஷ திட்டத்தைப் பற்றி ஏதோ புரியாத காரணத்தைச் சொல்லிக்கொண்டு பாமர மக்கள் உள்ளத்தில் தப்பு அபிப்பிராயத்தை உண்டாக்க முயற்சிப்பதுபற்றி நாம் ஆச்சரியப்படவில்லை.

இந்த 5 வருஷத்திட்டம் அநேகமாக நாம் எதிர்பார்த்ததும், சில நாம் 20 வருஷங்களுக்கு முன்பு இருந்தே சுயமரியாதை சங்க மாநாடுகளில், சீர்திருத்த மாநாடுகளில், ஜஸ்டிஸ் மாநாடுகளில் தீர்மானிக்கப்பட்டவைகளுமாகும். இவை இப்போது அமுலுக்குக் கொண்டுவர சர்க்காரால் திட்டம் போடப்பட்டதற்கு இரண்டு காரணங்களை முக்கியமானவைகளாகக் கூறலாம்.

ஒன்று-உலகயுத்தம் ஏற்பட்டதாகும். இரண்டு காங்கரஸ் ஆட்சி இல்லாதிருப்பதாகும். இந்த இரண்டில் ஒன்று மாற்றமாயிருந்தாலும் இந்த திட்டம் போடப்பட்டிருக்க முடியாது என்றே சொல்லுவோம்.

இந்த யுத்தமானது மற்ற தேசங்களுக்கு கேட்டை விளைவித்திருந்தாலும் நம்நாட்டைப் பொறுத்தவரை ஒரு "வரப்பிரசாதம்" போன்ற நன்மையை அளித்திருக்கிறது. அதாவது பொருளாதார வளப்பத்தையும் வாழ்க்கைத் திட்ட மேம்பாட்டையும் அளித்திருக்கிறதுடன் மக்களின் ஆசாபாசத்தை கிளப்பிவிட்டிருக்கிறது. பொருளாதார வரவு செலவில் என்றுமில்லாத துணிச்சலையும் பாய்ச்சலையும் உண்டுபண்ணி தாராளமாய்க் கையாட இடம் ஏற்பட்டு இருக்கிறது. ஆகையால் இந்த 5 வருஷ திட்டத்திற்கு யுத்தம் ஒரு காரணம் என்கின்றோம். மற்றபடி யுத்தம் நமக்கு இவ்வளவு நலத்தை அளித்திருந்த போதிலும் இரண்டாவது காரணம் காங்கரஸ் இன்று ஆட்சியில் இருந்திருக்குமானால் மேல்க்கண்ட அனைத்தும் பாழாக்கப்பட்டு ஏதோ ஒரு பாகம் பிரபுக்கள் செல்வர்கள் பார்ப்பனர்கள் நலத்திற்கே பயன்படுத்தப்பட்டு இராட்டினமும், கதரும் பொதுவுடமை வீரர்கள் தலையில் வைத்துப் பிரசாரம் செய்யப்பட்டு மக்களைக் காட்டுமிராண்டி காலத்துக்கு தள்ளிக்கொண்டு போக பயன்படுத்தப்படும்.

'யந்திரங்கள் கூடாது' என்று சொல்லுகிற காந்தியத்தின் படைகளால் பொருளாதாரத் திட்டமோ, வேறு தொழில்முறைத் திட்டமோ பயன்பட நடத்தப்படும் என்று எந்த அறிவிலிதான் கருத முடியும்? ஆகவே இந்த சமயத்தில் காங்கரசு பதவியில் இல்லாததே இத்திட்டத்திற்கு முக்கிய காரணம் என்றுசொல்லவேண்டியதாயிற்று. மற்றும் இதற்கு எடுத்துக்காட்டு வேண்டுமானால் தேசியப் பத்திரிகைகள் இதை பரிகாசம்செய்து எதிர்ப்பதுவே போதுமானதாகும்.

ஆனபோதிலும் யந்திரத் தொழில்முறை சாதனங்களை சர்க்கார் நேரில்வைத்து நடத்தாத எவ்வளவு பெரிய திட்டத்தாலும் அது 100க்கு100வீதம் லாபம் கிடைத்தாலும் பாமரமக்களுக்கு அதனால் ஒன்றும் லாபம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதுபோலவே மற்றும் பல திருத்தங்கள் மேலும் அத்திட்டங்களில் செய்யப்பட வேண்டி இருப்பது உண்மை. ஆனால் அதற்கு ஆக இப்போது போடப்பட்ட திட்டம் எதையும் அடிப்படையில் தவறு என்று சொல்லுவதும் வரவேற்காததும் தவறு என்று சொல்லுவதுடன் நல்லெண்ணமுடையதுமாகாது.

ஏழைப் பிள்ளைகளுக்கு ஒரு வேளை சாப்பாடு போட்டு எல்லா மக்களுக்கும் இலவச கட்டாயக் கல்வி கொடுப்பது என்பது 35, 40 வருஷங்களுக்கு முன்னாலேயே செய்திருக்கவேண்டிய காரியமாகும். அதாவது மக்களுக்கு அரசியல் நிர்வாகத்தில் ஓட்டுரிமை வழங்க நினைத்ததற்கு முன்பே செய்திருக்க வேண்டியதாகும். ஆனாலும்இப்போதாவது அதாவது "இன்று இந்நாட்டில் நடந்துவரும் ஆட்சி ஆரிய ஆட்சிக்கு பிரிட்டன் ஏஜண்டாய் இருந்து நடத்திவரும் ஆட்சியே தவிர பிரிட்டிஷ் ஆட்சி அல்ல" என்று பெரியார் எடுத்துக் காட்டி விளக்கிய பின்பும் "ஆரிய-பிரிட்டிஷ் ஒப்பந்தம் (காண்ட்ராக்ட்) உடைக்கப்படாதவரை பிரிட்டிஷ் ஆட்சி இந்த நாட்டில் அரை வினாடியும் இருக்க யோக்கியதை அற்றது" என்று நிரூபித்துக் காட்டிய பின்புமே இந்த கல்வித் துறையில் பிரிட்டிஷ் சர்க்கார் இந்த நிலைக்குவர நேர்ந்தது என்றாலும், இதை நிறைவேற்றும் பொறுப்பு ஆரிய ஆதிக்கத்தினிடம் விடப்படாமல் இருக்குமா என்பது பயமாகவே இருக்கிறது.

மற்றும் விவசாயத்தில் கூட்டுப் பண்ணை கூட்டுறவுப் பண்ணை கொள்கை புகுத்தப்படவேண்டியது விவசாய முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமானதாகும். எனவே அதுவும் 5 வருஷத்திட்டத்தில் காணப்படுகிறது. நீர்த் தேக்க அணைக் கட்டுகள் மின்சார உற்பத்திப் பெருக்கம் ஆகியவை நம் நாட்டை 100-க்கு 100 பங்கு விவசாயம் கைத்தொழில் ஆகியவைகளில் முன்னேற்றமடையச் செய்யத் தக்க சாதனங்களாகும். ஆகவே அதுவும் வரவேற்கத் தக்கதேயாகும்.

மற்றும் பல அம்சங்கள் பாப்பப்படவேண்டியவைகள் இருக்கின்றன. ஆனால் இரண்டு குறைகளை தற்காலம் எடுத்துக்காட்டித் தீரவேண்டி இருக்கிறது.

1. சமுதாய சம்மந்தமாக அதாவது இந்துக்கள் என்ற தலைப்பில் இருக்கின்றவர்களைப் பொறுத்தாவது ஜாதி, மதம், கடவுள் என்பவைகளின் போரால் மிருகப்பிராயத்தில் தாழ்ந்த இழிநிலையில் உள்ள பெரும்பான்மை மக்களின் நிலையை மாற்ற இன்று ஒரு திட்டமும், ஒரு வழிமுறையும் சிந்திக்கப்பட்டதாகவும்கூடத் தெரியவில்லை.

பொருளாதார, விவசாய, தொழில் இயல், கல்வி ஆகியவைகளையெல்லாம்விட முதலில் கவனித்திருக்கவேண்டிய காரியம் இதுவாகும். இந்தத் துறையில் மாறுதல் ஏற்படவில்லையானால் என்னதான் மற்ற மாறுதல்களும் மேம்பாடுகளும் ஏற்பட்டாலும் பொது மக்கள் பொருளாதார பேத வித்தியாச நிலை இப்போது போலவேதான் இருக்கும். ஆதலால் சமசந்தர்ப்பம் சமஉரிமை சம அனுபவிப்பு ஆகியவை ஏதாவது செய்யவேண்டுமானால் இத்தத்துறையில மாற்றத்திற்கான திட்டம் வகுக்கப்பட்டு ஆகவேண்டும்.

2. மற்றும் நம் மாகாணத்தில் இன்னமும் பல கப்பல் துறைமுகங்கள் ஏற்படவேண்டும் பழங்காலத்தில் இருந்த துறைமுகங்களையெல்லாம் புதுப்பிக்கவேண்டும்.

இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் 20 மைல்உள்ள துறைமுகதூரம் இன்று நூற்றுக்கணக்கான மைல்களாக ஆக்கப்பட்டிருப்பது கொஞ்சமும் சரி என்றோ நல்லெண்ணமுடையதென்றோ சொல்லிவிடமுடியாது.

மற்றும் சென்னைக்கும் கள்ளிக்கோட்டைக்கும், சென்னைக்கும் நாகப்பட்டணத்திற்கும் சமுத்திரக் கரையிலும் கரை அல்லாத சௌகரியப்பட்ட இடங்களிலும் படகு வாய்க்கால் வெட்டப்பட்டு ரயிலோ, சமுத்திர வழியோ இல்லாமல் படகுகள் மூலம் சாமான் போக்குவரத்து வசதிகள் செய்யப்படவேண்டும். இதை சாத்தியமான இடங்களில் எல்லாம் உடனே துவக்க வேண்டியது மிக்க அவசியமான காரியமாகும். ரயில் போக்குவரத்து வசதிகள் சர்க்கார் எடுத்துக்கொண்டது போலவே பஸ் போக்குவரத்து வசதிகளையும் லாரி வசதிகளையும் சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும்.

மக்களுக்கு 14 அல்லது 16 வயதிற்குள் நன்றாய் படிக்கவும் எழுதவும் கணக்குப்போடவும் கற்றுக்கொடுத்துவிட்டு 16 முதல் 18 அல்லது 20 வயது வரை மேற்கண்ட அதாவது இயந்திரம், விவசாய கூட்டுப்பண்ணை, துறைமுகம், போட்டு, வாய்க்கால், பஸ், லாரி முதலிய காரியங்களுக்கான தொழில்கல்வியைகற்றுக்கொடுத்து எந்தவாலிபனுக்கும் 18 அல்லது 20 வயது ஆனவுடன் விண்ணப்பம் எடுத்துக்கொண்டு வீடுவீடாய்த் திரிவதற்கு இல்லாமல் ஒரு வேலை ஏற்படும்படியான வசதியைச் செய்ய வேண்டும். இவைகளும் இன்னும் இவைபோன்ற சிலவும் புரட்சி இல்லாமலும், இருக்கும் பொருளாதார அமைப்பைக் வலுவில் கைப்பற்றாமலும் சாதாரணமாகச் செய்யலாம். மக்களுக்கும் இதன் பயன்கள் புரட்சிகரமாய் பலாத்காரமாய் தோன்றாமல் நாட்டின் முக்கியமான தொல்லையையும் குறைகளையும் "படிப்படியாய்" நீக்கக்கூடியதாக ஆகிவிடும்.

பெண்மக்களின் விஷயத்தில் கூட்டுக்கல்வி, கூட்டுத்தொழில் முறை ஆகியவைகளில் அவர்களை அதிகமாக ஈடுபடுத்தி பெண்களுக்கு "அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவை இருக்க வேண்டும்" என்பதை மாற்றி ஆண்களைப்போன்ற சம உணர்ச்சியையும், சம தன்மையையும் ஏற்படுத்தத்தக்க திட்டங்கள் இந்த 5 வருடத்தில் புகுத்தப்பட வேண்டும் ஆகவே பொதுவாக ஹோப் கவர்னர்துரை அவர்களின் சர்க்காரின் 5 வருட திட்டத்தை வரவேற்கிறோம்.

திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

5-5-45ந் தேதி வரை 31802 அங்கத்தினர்கள் ரூ 3149—10—0 சந்தா

மே மாதம் 5-ந் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

1. தஞ்சை	5516	9. சென்னை	1700
2. கோவை	5500	10. மதுரை	1432
3. சேலம்	4463	11. செங்கல்பட்டு	831
4. திருச்சி	3886	12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு)	192
5. இராமநாதபுரம்	2268	13 பெங்களூர்	158
6. திருநெல்வேலி	2114	14. புதுக்கோட்டை	65
7. தென் ஆற்காடு	1852		
8. வட ஆற்காடு	1828		

ஆகமொத்த அங்கத்தினர்கள் 31802. சந்தா ரூ. 3149-10-0

காந்தியைப் பின்பற்றிய ஹிட்லர் முடிவு

ஹிட்லர் முடிவெய்திவிட்டதாக வெளிவந்த சேதி உறுதியாக்கப் பட்டுவிட்டது. இது பொது உடமைக்கு வெற்றி என்று கருதப்பட வேண்டும்.

ஹிட்லர் காந்தியாரைப்போலவே ஒரு வைதிகக்காரக் கொள்கையை மேற்போட்டுக் கொண்டவர். அதாவது 1930-ல் தமிழ் நாட்டில் பொது உடமைக் கொள்கை நல்ல முறையில் பிரசாரம் நடந்து கொண்டு இருக்கும் போது காந்தியார் உப்பு சத்தியாக்கிரகம் ஆரம்பித்துவிட்டு அந்தப்படி ஆரம்பித்ததற்குக் காரணமாக,

"நான் இந்த சத்தியாக்கிரகம் ஆரம்பிக்காமல் இருந்தால் நாட்டில் பொதுவுடமைக் கிளர்ச்சி வலுத்து மக்களுடைய சமாதானமும் பாதுகாப்பும் பாழ்பட்டு விடும்'

என்று கூறினார்,

"பாவம்"! பரிதாபத்திற்குறிய ஹிட்லரும் அதுபோலவே,

"பொதுவுடமைப்பேயின் இருந்து உலகத்தைக் காப்பாற்றவே இந்தப்போரைத் துவக்கி இருக்கிறேன்"

என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே வந்தார். இவர்கள் இப்படிச் சொன்னதின் பயனாக இந்திய முதலாளிகள், பிரபுக்கள், இவர்களுக்கு சமமான வாழ்க்கை நடத்தும் பார்ப்பனர்கள் ஆகியவர்களின் உதவியாலும் ஆதரவாலும் காந்தியார் அபரிமிதமான செல்வமும் போகமும் விளம்பரமும் செல்வாக்கும் பெற்றார். வெறிகொண்டவரின் சர்வாதிகாரம் போல் தன் வாயில் இருந்துவந்த வார்த்தைகள் எல்லாம், கையில் இருந்துவந்த எழுத்துக்கள் எல்லாம் 'அசரீரி' வாக்குப்போல் ஏராளமான மக்கள் கருதும்படியான தன்மையும் பெற்றார். அதுபோலவே ஹிட்லரும் ஜெர்மன் மக்களுக்கு விளங்கினார்.

இப்படி விளங்கிய ஹிட்லர் பலாபலனை சிந்திக்காத வெத்துவேட்டு வீராக முடிவெய்திவிட்டார். காந்தியாரும் பலாபலனை சிந்தியாத வெறும் விளம்பர மகாத்மாவாக "நான் 125 வருஷம் வாழவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு அதற்காகவே கங்கணம் கட்டிக்கொண்டு அதற்கான முறையில் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு இருக்கிறார்.

ஆகவே இவ்விரு மேதாவிகளும் அடைந்த பலன் அடையும் பலன் தோல்வி என்பதைத் தவிர வேறொன்றும் இல்லையென்று குறிப்பிடத்தக்க நிலையில்தான் இருவர்கள் சரித்திரமும் எழுதப்படப் போகின்றது என்பது உறுதி. ஏனெனில் இவர்கள் மேற்போட்டுக்கொண்ட காரியம் "4ம் 4ம் பத்து" என்று நிரூபிக்கப் போர் தொடங்கினவர் போல் பொதுஉடமைக் கொள்கை தவறு என்று கூறி அதை ஒழிக்க முற்பட்ட காரியமாகும். அதை (பொதுஉடமை கொள்கையை) இனி உலகில் யாராலும் வீழ்த்தி விடமுடியாது. அதற்கு எதிராய் நிற்பவர்களும் இந்த கதியைத்தான் அடைவார்கள். பொது உடமையை எதிர்ப்பவர்கள் மாத்திரமல்லாமல் போலி பொதுஉடமைக்காரர்களும் பொதுஉடமைக் கொள்கையின் போர்வையில் வாழப் பார்ப்பவர்களும் இந்த கதியைத்தான் அடைவார்கள். பிரிட்டன் ஆனாலும் சரி, அமெரிக்காவானாலும் சரி இன்னும் எதுவானாலும் வெகு சீக்கிரத்தில் பொதுவுடமைக் கொள்கைக்கு அடிமையாக ஆகவேண்டும் அல்லது ஜெர்மனி (ஹிட்லர்) கதியை அடைந்தாகவேண்டும் என்பதுதான் எதிர்கால உலக 'ஜோசியமாய்' இருக்க முடியும். அவ்வளவு தூரம் போவானேன் இன்றும் அநேக அறிஞர்களின் உள்ளத்தில் பிரிட்டனும் அமெரிக்காவும்கூட பொது உடமை நாட்டார்தான் தலைதப்பிற்று என்கின்ற எண்ணம் பதிந்துவிட்டது.

பொது உடமை என்பது அங்கு அந்த வார்த்தையானது நாட்டில் அதன் எதிரிகளால் வெறுக்கத்தக்க வார்த்தையாக ஆக்கப்பட்டு அது ஒரு பூச்சாண்டிபோல் பலரால் கருதப்படுகிறது. ஆனால் இன்று ஐரோப்பாவில் அநேகமாய் அந்த வெறுப்பு உணர்ச்சியோ, பய உணர்ச்சியோ குறைந்துவிட்டது. சைனாவிலும் அதற்கு சிறிது மதிப்பு இருந்து வருகிறது. இதற்குக் காரணம் அங்கு பொதுஉடமை கொள்கைக்கு எதிரான ஜாதிமத உணர்ச்சியோ ஜாதியையும் மதத்தையும் காப்பாற்ற என்றே தனிப்பட்ட பிரபுக்களும் பிறவி ஜாதியுமோ அங்கு இல்லை.

ஆனால் இந்தியாவில் மனித சமுதாய சமத்துவத்திற்கு எதிரான பிறவி ஜாதியும் பிறவி செல்வவான்களும் இருப்பதால் இங்கு அந்த பொதுவுடமைப் பூச்சாண்டியும் வெறுப்பும் வளர்க்கப்பட்டு வருகிறது என்றாலும் காங்கரசும் பார்ப்பனீயமும் விழுந்த அன்றே அந்தக் குழியிலேயே இந்த பொதுவுடமை வெறுப்பும் பூச்சாண்டியும் தானாக விழுந்துவிடும்.

எப்படியெனில் பொதுவுடமை என்றால் "ரஷியப் பொதுவுடமை முறையேதான்" என்கின்ற எண்ணமும். ரஷியப் பொதுவுடமை எப்படி வந்தது என்கின்ற தன்மை அறியாத எண்ணமும் இன்று நம் மக்களுக்கு போலிப் பொதுவுடமை வாதிகளால் புகுத்தப்பட்டுவிட்டது. இந்தப் பிரசாரம் சீக்கிரத்தில் அடங்கி, பொது உடமை, போல்ஷுவிசம் என்கின்ற பூச்சாண்டிப் பேச்சே இல்லாமல் மேட்டிலிருந்து பள்ளத்திற்குத் தண்ணீர் வழிந்தோடுகிற மாதிரி ஜாதிமதங்களை ஒழித்து மக்கள் சமுதாயத்தை ஒன்றுபடுத்த முயலும் முயற்சியாலும், கடவுள் தன்மை சூழ்ச்சிகளை விளக்கி மக்களுக்கு பகுத்தறிவும் அன்பு தன்மையும் ஊட்டும் முயற்சியாலும், மனித சமுதாயத்தின் எத்துறையிலும் பேதமற்ற குறைபற்ற சமத்துவ வாழ்வும் தானாகவே ஏற்படப் போவது உறுதி.

ஆகவே ஹிட்லர் கதியை எடுத்துக்காட்டாகக் கொண்டு காங்கரசிலிருந்தும் பார்ப்பனீயத்தில் இருந்தும் வெளிவந்து, போலி பொது உடமை மாய்கையில் சிக்காமல் நின்று மக்கள் குறையையும் பேதத்தையும் ஒழிக்க முற்படுவோமாக.

திருச்சி மவட்ட மருத்துவகுல சங்கம வாகனேரி மேட்டுத்தெருவில் 28-4-45-ல் தோழர் டீ. கோவிந்தசாமி வைத்தியர் தலைமையில் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் சித்த மருத்துவப் பள்ளி வகுப்பைத் துவக்கிவைத்தார்.

ரோஜா முத்தையா

புரட்சிக் கவிஞர்

நமது திராவிடநாட்டு புரட்சிக் கவிஞர் கனக சுப்புரத்தினம் (பாரதிதாசன்) அவர்களுடைய உருவப்படம் இதுவரையிலும் வெளிவராத புதிய முறையில் மனதைக்கவரும், பல கலர் வேலைப்பாடுகளுடன் அழகிய அமைப்பில் வெளிவருகிறது.

விபரங்கட்கு:-

திராவிடன் பதிப்பகம்,
133—லாங்கு பசார், வேலூர். (வ. ஆ.)

பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

பெரியார் ஏற்காட்டில் சுமார் 20 நாட்கள் இருந்ததின் பயனாக காலிலிருந்த புண் அநேகமாக குணப்பட்டு உடல் நிலையும் மிக்க குணப்பட்டு இருக்கிறது. 3-5-4ந் தேதி பெரியார் ஏற்காட்டை விட்டு புறப்பட்டு 4-வ ஈரோட்டில் துவக்கப்படும் மாணவர் பிரச்சாரக் கூட்ட பயிற்சிசாலைக்காக ஈரோடு சேர்ந்தார். 5-ந் தேதி திருப்பூர் திராவிட கழக ஆண்டு விழாவுக்குச் சென்றுவிட்டு 6-ந் தேதி ஈரோட்டில் நடக்கும் மாணவர் மாநாட்டில் இருந்துவிட்டு 7 அல்லது 8-ந் தேதி திரும்பவும் ஏற்காட்டிற்குச் சென்று 20 நாட்கள் வரை வேறு எவ்வித அழைப்புகளுக்கும் செல்லாமல் ஓய்வு பெறுவார்.

ஏற்காட்டில் பெரியார் மீட்டிங்கு

29-4-45-ஆந் தேதி மாலை 5 மணிக்கு ஏற்காட்டில் தோழர் வி. டி. ராஜ் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்ட நடைபெற்றது. கூட்டத்தில் தோழர்கள் தவமணிராஜன், சேலம் கபார், எம். ஆர். சித்தய்யன், ஆர். நடேசன் இவர்கள் பேசிய பின் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சுமார் 2 மணி நேரத்திற்கு மேல் நம் நாட்டின் சமுதாய நிலையும், பொருளாதார நிலையும், அறிவுத்துறையும், இவ்வளவு பாழ்ப்பட்டு நிலைகுலைந்து இருப்பதற்குக் காரணம் "இந்திய ஆரியரும் ஐரோப்பிய ஆரியருமான பார்ப்பனரும், பிரிட்டிஷாரும் ஒன்று சேர்ந்து ஒப்பந்தம் பேசிக்கொண்டு ஒருவருக்கொருவர் தங்கள் தங்கள் நலத்தின் பாதுகாப்பிற்காக உதவி செய்துகொண்டு ஆட்சி நடத்தும் காரணங்களை அநேக ஆதாரங்கள் எடுத்துக் காட்டி விளக்கிப்பேசினார். முடிவாக திராவிட மக்களாகிய நாம் யாவரும் ஜாதி மதம் பேதமில்லாமல் ஒன்றுசேர்ந்து சர்க்காருக்கு கவலை ஏற்படும்படியான மாதிரியில் கஷ்டங்களை அனுபவிக்க துணிந்து ஒரு கொடியின் கீழ் இருந்து தொண்டாற்ற தகுதி உடையவர்களானால் ஒழிய எந்த காரியமும் நடைபெறாது'', என்று எடுத்துச்சொன்னார். இப்பேச்சுக்கப்புறம் ஏற்காட்டில் ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டது. பலர் அங்கத்தினர்களாகவும் சேர்ந்தார்கள். இக்கூட்டம் நடத்துவதற்கு ஏற்காட்டுத்தோழர்கள் ராமய்ய, ஜி. ஏ. சாமி முதலியவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டது பாராட்டத்தக்கது. கூட்டத்திற்காக சேலத்திலிருந்து சுமார் 70 பேர்கள் வரை பஸ்களிலும், சைக்கில்களிலும், கால் நடையாகவும் வந்தார்கள். இவர்களில் 50 பேர்களுக்கு மேலாக இரண்டு நாள் பெரியார் இருப்பிடத்தில் உணவு முதலியவைகள் நடந்தன.

விவசாய வருமானவரி ஆதரிப்பு மாநாடு

ஷை மாநாடு திருவாரூரில் மே மாதத்தில் நடைபெறும் எனத் தெரிகிறது. ஷை மாநாட்டில் எல்லாக்கட்சித் தலைவர்களும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

சென்னை தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன்

6-5-45 மாலை 7 மணிக்கு ஷை சங்கத்தின் அங்கத்தினர்கள் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் நிர்வாக அங்கத்தினர்கள் தேர்தலும் வரவுசெலவு கணக்கும், சங்கத் திறப்புவிழாவைப் பற்றிய முடிவும் செய்யப்படும்.

ஈரோட்டில் பொதுக்கூட்டம்

30-4-45-ந் தேதி இரவு 10-30 மணிக்கு ஈரோடு பழக்காரத்தெரு மதரஸாவுக்கு முன் ஒலிபெருக்கி அமைக்கப்பட்டு ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் ஜனாப் ஜஸ். அப்துல் கபூர் சாயபு தலைமையில் கூடியது. ஷை கூட்டத்தில் மேலக்காவேரி எஸ். முகமது இப்ராஹீம் அகால மரணத்தை முன்னிட்டு ஈரோடு முனிசிபல் கவுன்சிலர் ஆ. மைதீன் பாஷா சாயபு அவர்களால் ஒரு அனுதாபத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஷை தீர்மானம் பண்டிட் ஜெயவாணி அவர்களால் ஆதரிக்கப்பட்டது. கூட்டம் நடந்த இடத்திற்கு "சித்திக் சவுக்" என்று பெயர் இட வேண்டும் என்று ஜனாப் எம். அபீப் சாயபுவால் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஈ கே. அனியா சாயபால் ஆதரிக்கப்பட்டது. தோழர்கள் எம். என். வகாப் சாயபு, மௌல்வி அப்துல் கனி சாயபு, தாராபுரம் தோழர் ஜீவரத்தினிஷா அம்மையார், ஊட்டி பண்டிட் ஜெயவாணி முதலியவர்கள் அரிய சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் ஈரோடு முனிசிபல் கவுன்சிலர் ஜனாப் ஏ. மைதீன் பாஷா சாயபு வந்தனம் கூறக் கூட்டம் இரவு 2 மணிக்கு இனிது கலைந்தது. கூட்டத்திற்கு 2000 கோஷா பெண்கள் விஜயம் செய்தது குறிப்பிடத்தக்கது.

மறைவு

மாயவரம் தோழர் டி. சின்னையா அவர்கள் 26-4-45-ந்தேதி இயற்கையெய்தார் என்பதை அறிந்து வருந்துகிறோம்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி முறைப்படி நடைபெறுமானால், நமக்குப் பயன்படக்கூடிய உடலுறுதி படைத்தவர்கள் யார் மிச்சமிருக்கப் போகிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

இன்றைய கல்வி நமது இளைஞர்களைக் கோழைகளாக்கிவிட்டது. தங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் அல்லது தங்கள் ஊருக்குப் பக்கத்தில் ஏதாவது சிறு குமாஸ்தா வேலை கிடைத்தால் போதும் என்று கருதும்படி செய்துவிட்டது. ஆகவே இவர்கள், அதாவது படித்த இளைஞர்கள் படையில் சேர்ந்து ஒழுங்கு முறைகளைக் கற்றுக்கொண்டு தங்கள் நாட்டைப் பாதுகாக்கவாவது கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

உடலுறுதியில்தான் மோசமென்றால் புத்தியிலாவது சாதாரண மக்களைவிட பட்டதாரிகள் மேலானவர்களா என்றால் அதுவுமில்லையென்றே கருதவேண்டியிருக்கிறது. நடந்த வருடங்களைப் போன்ற நல்ல வாய்ப்பு இவர்களுக்கு எப்பொழுது கிடைக்கப் போகிறது? நாட்டுக்குப் பயன்பெறும் முறையில் அவர்கள் படையில் சேர்ந்து பயிற்சி பெற்றிருக்கலாம், அதையிழந்துவிட்டார்கள். சேனையில் சிலர் சேர்ந்திருக்கிறார்கள் என்பது உண்மையே; ஆனால் அவர்களின் தொகை மொத்த ஜனத்தொகையில் மிகக் குறைந்த அளவேயாகும். நல்ல சந்தர்ப்பத்தை பட்டதாரிகள் அதாவது கல்லூரி மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லையென்றே சொல்லவேண்டும். படித்த பட்டதாரிகள் சமயத்திற்கேற்றவாறு நடந்துகொள்ளவில்லையென்பது விளங்கும். இதற்கு நமது கோவை ஜில்லாவிலே போதுமான உதாரணம் இருக்கிறது. நமது ஜில்லாவில் 30க்கு மேற்பட்ட பஞ்சாலைகள் (மில்கள்) இருக்கின்றன. இவைகளில் 4 அல்லது 5 தவிர மற்றவை கல்லூரி படிப்போ இஞ்சினீயரிங் படிப்போ இல்லாத மானேஜிங் ஏஜண்டுகளால் தான் நிருவகிக்கப்பட்டன. இவ்வாறு இருந்தும் அவர்கள் கட்டி [illegible] [illegible] களையும் பாருங்கள்! ஆனால் மற்றவைகளின் மானேஜிங் ஏஜண்டுகளை எடுத்துக் கொள்ளுங்கள். இவர்கள் எல்லாம் கல்லூரி படிப்புப் பெற்று வெளிநாடுகளில் பயிற்சிபெற்றவர்கள். இவர்கள் செய்வதென்ன? குமாஸ்தாக்களை மேற்பார்வையிடுவதைத் தவிர வேறு என்ன வேலை செய்கிறார்கள்? தங்கள் தந்தைமார்கள் துவக்கிய ஸ்தாபனத்தைக் கவனித்துக் கொள்வதைத் தவிர செய்வதென்ன? இவர்களைவிட குறைந்த படிப்புடைய தங்கள் தந்தைமார்கள் இவ்வளவு பெரிய மில்களையும் வியாபாரத்தையும் நடத்தி வந்திருக்கையில், அவர்களைவிட அதிகப் படிப்பும் தனிப் படிப்பும் படித்துவிட்டு வந்திருக்கும் இளைஞர்கள் ஒன்றும் செய்யாமல் இருப்பது வெட்கமில்லையா? இதற்குக் காரணம் கல்வி முறையில் குறையிருக்கிறது என்று சொல்வதைத்தவிர வேறு என்ன சொல்ல முடியும்? இக்குறைகளை கல்வி அதிகாரிகள் அறியாமல் இருக்க முடியாது. அறிந்தும் வெளியில் சொல்ல அவர்களுக்குத் தைரியமில்லை. காரணம் அவர்களுக்கும் இதே கல்விதானே கற்பிக்கப்பட்டது. ஆகவே அவர்கள் கோழைகளாகி விட்டார்கள்—தைரியமற்றவர்களாகி விட்டார்கள். நாமெல்லாம் இவர்களால் செயலற்றவர்களாக்கப்பட்டிருக்கிறோம்.

(தொடரும்)

எதிர்பாருங்கள்!
நாகை திராவிட நடிகர் கழகத்தாரால்
விழுப்புரம் கமலா எலக்ட்ரிக் தியேட்டரில் சமூக சீர்திருத்த
நாடகங்கள் நடைபெறும்.
ஆரம்ப நாடகம்!
சாந்தா அல்லது
சமூகத்தின் கொடுமை
தலைவர்: R. V. கோபாலன்.
கதை, வசனம்: மு. கருணாநிதி.

அனுதாபம்

செங்கை வழக்கறிஞர் தோழர் எம். கற்பூரசுந்தரபாண்டியன், அவர்கள் மனைவியாரும் வழக்கறிஞர் தோழர் வ. இராசசேகரன், மாணவத்தோழர் க. இரா. சத்தியேந்திரன் ஆகியவர்களின்

வாழ்க்கை உறுதிப்பாடு

13-5-45-ஆம் தேதி காலை 9 மணிக்கு மேல் சென்னை ஜியார்ஜ் டவுன் வைத்தியநாத முதலித்தெரு 5-வது இல்லத்தில் (நாராயண பவனம்) தோழர் இந்திராணி பாலசுப்ரமணியம் அவர்களின் தலைமையில் தோழர்கள் எ. முருகேசம்-சாரதாம்பாள் அவர்களுக்கு வாழ்க்கை உறுதிப்பாடு நடைபெறும்.

அவ்வமயம் தோழர்கள் எஸ். ராமநாதன், சி. என். அண்ணாதுரை, ஜி. ரங்கையநாயுடு, சி. தங்கராஜ் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். அனைவரும் வருக.

மாயவரம் மருத்துவர் மாநாடு

மாயவரம் தாலூகா மருத்துவர் முதலாவது மாநாடு 11-5-45 வெள்ளிக்கிழமை மாயவரம் நெ. 2. ரோடு எஸ். பொன்னுசாமி அவர்கள் பார்க்கில் சீர்காழி சப்ரிஜிஸ்ட்டார் வஸ். வி. தாஸ் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

பொள்ளாச்சி பி. கே. பாபு சாஹிப் அவர்களின் வாழ்க்கைத் துணைவி ஹமீதா பேகம் அவர்களுக்கு 26-4-45-ந் தேதி ஆண் குழந்தை பிறந்து குழந்தைக்கு 'ஆஜாத் பகத் வியாகத்தலி' என்ற பெயர் சூட்டப்பட்டு தாயும்சேயும் சுகமாக இருக்கிறார்கள்.

[illegible] இராமலக்ஷ்மி அம்மாள் அவர்கள் 24-4-45 புதன் மாலை 7-மணி சுமாருக்கு இயற்கை எய்தினார்கள் என்பதையறிய வருந்துகிறோம். இவர் இவ்வூர் பெண்கள் கழகத்திற்கு தலைவராகவும், செஞ்சிலுவைச் சங்க உறுப்பினராகவும் இருந்து பெண்கள் முன்னேற்றத்திற்கு பாடுபட்டிருக்கிறார்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது பைக்காரா உற்பத்தி ஸ்தாபனத்தைப் பெருக்கி 25000 கிலோவாட்ஸ் அதிகப்படுத்தவேண்டுவது மிகவும் அவசரமானதும் முக்கியமானதுமாகும். மற்றும் சென்னை தெர்மல் ஸ்டேஷனுடன் மேட்டூர் ஹைட்ரோ எலக்ட்ரிக் சிஸ்டத்தையும் பாபநாசம் பவர் ஸ்டேஷனையும் இணைத்து, துங்கபத்ராமேக்சந்த் மின்சார ஸ்தாபனங்களைத் துவக்க ஏற்பாடுசெய்யப்படும்.

மேக் சந்த் திட்டம் முதல் ஐந்தாண்டில் செய்து முடிக்கப்படும். 5-வது வருடக்கடைசியில் இதிலிருந்து மின்சாரம் கிடைக்கப்பெறலாம். ஆனால் இத்திட்டம் முடிவுபெற 10 ஆண்டுகளாவது பிடிக்கும். மேக்சந்த் ஆற்றில் அணைக்கட்டுவதென்பது திட்டம். இத்திட்டம் சென்னைக்கும் ஒரிசாவுக்கும் பயனளிக்கும்.

அடுத்தபடியாக பைகாராவுக்கு உதவியாக மோயாற்றில் வரும் கழிவு நீரை உபயோகித்து ஒரு மின்சார உற்பத்தி ஸ்தாபனம் ஏற்படுத்தவும், பாபநாசம் ஸ்தாபனத்துடன் இணைக்கும்படியாக 3 தனி யூனிட்டுகள் கொண்ட திட்டமொன்றை திருவாங்கூர் சமஸ்தானத்துடன் சேர்ந்து நடத்தத்தக்க ஸ்தாபனம் ஒன்று நிறுவவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கார் பங்கு

சர்க்கார் தொழிற்சாலைகளின் சொந்தக்காரராக இருப்பதா அல்லது நடத்திவைப்பவராக இருப்பதா என்பது பற்றி மிக்க கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இம்மாகாணத்தில் உள்ள போக்குவரத்து சாதனங்கள் முழுவதையும் சர்க்காரே ஏற்று நடத்திவரவேண்டுமென்று போர் பிற்கால புனரமைப்பு கமிட்டியார் சிபார்சு செய்திருக்கிறார்கள். சேர்க்கை சக்தி உற்பத்தி செய்வதையும் சப்ளை செய்வதையும் சர்க்காரே நேரடியாக வைத்து நடத்த வேண்டுமென்றும் தனிப்பட்டவர்களிடம் ஒப்புவிக்கக்கூடாதென்றும் அக்கமிட்டியார் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

இது விஷயங்களில் மத்திய சர்க்காரின் சம்மதம் பெறவேண்டியிருப்பதால் அவர்களிடமிருந்து இன்னும் முடிவானபதில் கிடைக்கவில்லை. ஆனாலும் சென்னை சர்க்கார் இத்திட்டம் தயார் செய்கையில், இத்தகைய இனங்களுக்கு ஆகும் செலவுக்காகவும் பணம் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்.

தற்காலிகமாக, சர்க்கார் சிறிய குடிசைத் தொழில்கள் அபிவிருத்திக்கும், பலதரப்பட்ட தொழிற் கல்வி ஸ்தாபனங்களை நிறுவவும் சர்க்கார் திட்டம் போட்டிருக்கிறார்கள். சென்னையில் ஒரு தோல் ஆராய்ச்சிக் கழகமும், ஒரு தொழில் கெமிகல் ஆராய்ச்சிக் கழகமும், கன்னிக்கோட்டையில் ஒரு எண்ணெய் டெக்னலாஜிகல் கழகமும், கோவை ஜில்லா கொள்ளேகாலத்தில் ஒரு செரிகல்ச்சர் கழகமும் நிறுவப் பெறும்.

ரோடு அபிவிருத்தித் திட்டம்

மாகாண ரோடு திட்டம் முழுமையும் பூர்த்தியாக 15 வருடங்களாகும். 27000 மைல்களுக்கு மேலாக இப்போதுள்ள எல்லா ரோடுகளின் லெவலை உயர்த்தவும் 8800 மைல் கிராம ரோடுகளைச் செப்பனிடவும், எல்லா வகையிலும் புதிதாக 20000 மைல் தூரம் ரோடுகள் போடவும் 1000-க்கு அதிகமான பாலங்கள் கட்டவும் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் மொத்தச் செலவு சுமார் 75 கோடி ரூபாயாகும். இதில் 27. 77 கோடி முதல் ஐந்தாண்டுகளில் செலவழிக்கப்படும்.

இதில் தேசியப் பாதைகளுக்கு ரூ. 7 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொகை முழுவதையும் இந்திய சர்க்கார் மான்யமாகக் கொடுப்பார்கள். மேலும் யுத்தம் காரணமாக கவனிக்கப்படாமல் கெட்டுக்கிடக்கும் ரோடுகள் முதல் 2-வருடங்களில் கவனிக்கப்படும். அதன் பின் முதன்மை வரிசைக்கிரமப்படிக்கு புதிய தொழில் ஸ்தானங்கள், பொருள் விற்பனை விநியோகப் பிரதேசங்கள், காடுகள், மீன்பிடிக்கும் கிராமங்கள், இவைகளுக்கு உபயோகிக்கக்கூடியவகையில் ரோடுகள் போடப்படும். ஒரு சீப் என்ஜினீயரின் கீழ் ஒரு ஹைவேஸ் இலாகா ஏற்படுத்தப்படும். யுத்த சேவையிலிருந்து வருகிறவர்கள் தவிர, எஞ்சினியரிங் கல்லூரியில் குறைந்தகாலப் பயிற்சிபெற்ற 100 பேர்கள் வருடந்தோறும் வருவார்கள். இப்பொழுது பி. டபுள்யூ. டி. இலாகா செய்யும் வேலையையும் இவ்விலாகா மேற்கொள்ளும்.

ரோடுகள் பராமரிப்புக்கு ஆகும் செலவைக் குறைப்பதற்காகக் கட்டைவண்டிக்காரர்களுக்கு மான்யமாகவோ, நீண்டநாள் தவணைக் கடனாகவோ பணம் கொடுத்து மோட்டார் டயர் போட்ட சக்கரங்களைத் தங்கள் வண்டிகளுக்கு வாங்கிக் கொள்ளவோ, அத்தகைய சக்கரங்கள் போட்டு விற்கப்படும் வண்டிகளை வாங்கிக் கொள்ளவோ உதவி செய்யப்படும். முதல் 5 ஆண்டுகளில் இத்திட்டம் முனிசிபல் நகரங்களில் அமுலுக்குக் கொண்டுவரப்படும். மாகாண வாய்க்கால் திட்டத்திற்காக ரூ. 53. 65 லட்சம் செலவழிக்கப்படும்.

நீர்வழிப்பாதை அபிவிருத்தி

கடற்கரையை ஒட்டிய பிரதேசங்களில் நீர் வழிப்பாதையை விருத்தி செய்வது அடுத்த திட்டம். இத்திட்டம் இரண்டாவது 5-ஆண்டுகளில்தான் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

மேலும் மாகாணத்திலுள்ள சிறிய துறைமுகங்களுக்கு வேண்டிய அபிவிருத்திகளும் செய்யப்படும். இரண்டு கரைக்கும் இரண்டு டிரெட்ஜர்கள் வாங்க உத்தேசம்.

அத்துக்குடியில் ஒரு டிரெட்ஜர் டாக் அமைக்கப்படும்.

ராமேஸ்வரத்தில் தெற்குக் கடைசியில் ஒரு வாய்க்கால் வெட்டி, கப்பல்கள் படகுகள், கிழக்குக் கடற்கரையிலிருந்து மேற்குப்பக்கத்திற்குப் போகவேண்டுமானால், இனி இலங்கையைச் சுற்றிப் போகாதவாறு செய்யப்படும். துறைமுகங்களுக்காகவும் ராமேஸ்வரம் கப்பல் வாய்க்காலுக்காகவும் இந்த முதல் 5 வருடத்தில் ரூ. 3. 32 கோடி செலவு செய்யப்படும்.

கட்டாய இலவசக் கல்வி

மாகாணம் முழுவதும் 8 வது வகுப்பு வரையில் ஆண் பெண் பிள்ளைகளுக்குக் கட்டாய இலவசக் கல்வி அளிப்பது சர்க்காரின் நோக்கமாகும். இதை 20-வருடங்களில் செய்து முடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. போருக்குப் பின் எவ்வளவு அதிகப் பிள்ளைகளுக்கு குறுகிய காலத்தில் கல்வி கற்பிக்க முடியுமோ அவ்வளவும் செய்வது என்பது உத்தேசம். எழுதப்படிக்கத்தெரியாதென்பதை யொழிக்கவேண்டும் என்பது முக்கியலட்சியம். குறைந்தது 5-வது வகுப்புவரையாவது படிக்கச் செய்ய வேண்டும் என்று கருதப்படுகிறது. இப்போது படித்துவரும் 30-லட்சம்பிள்ளைகளுடன் இன்னும் 13. 3 லட்சம்பிள்ளைகளைச்சேர்க்க இந்த 5-வருடத்தில் முயற்சி செய்யப்படும். பள்ளிக்கூடக் கட்டிடங்களுக்காக இனி சர்க்கார் அதிகப்பணம் செலவுசெய்யமாட்டார்கள் என்பது இத்திட்டத்தில் குறிப்பிடத்தக்கது. ஆங்காங்கு வாடகைகளும், இப்பொழுதுள்ளகட்டிடங்களும் உபயோகிக்கப்படும் குழந்தைகள் கல்வி கற்று உண்மையாகவேபயன்பெற வேண்டுமானால் அவர்களுக்கு வயிற்றுக்குக் கஞ்சி வேண்டும். ஆகவே, ஏழைப் பிள்ளைகளுக்கு பகல் உணவு இலவசமாக அளிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. முதல் 5 ஆண்டுகளில் படிப்படியாக இத்திட்டம் புகுத்தப்படும். எங்கு அவசியமோ அங்குதான் இத்திட்டம் முதலில் அமலுக்குக் கொண்டுவரப்படும். முதல் 5 வருடக் கடைசியில் 40 லட்சம் ஏழைப் பிள்ளைகளுக்கு பகல் சாப்பாடு இலவசமாக அளிக்கப்படும். அடுத்த 5 ஆண்டில் மாகாணம் முழுவதிலுள்ள ஆரம்பப் பாடசாலைகளில் எல்லாம் இம்முறை அமலுக்கு வந்துவிடும். அப்பொழுது இதற்கு உத்தேசமாக ரூ. 12½ கோடி

செலவாகும். மேலும் பள்ளிக்கூடங்களில் வைத்திய பரீட்சை ஏற்படுத்தவும் உத்தேசம். உடற்பயிற்சி ஆசிரியர்களின் சக்தியை அதிகரிக்க மற்றுமொரு திட்டமும் உண்டு.

ஆசிரியர்களின் நிலை உயரும்

ஆசிரியர்களின் நிலை அதாவது சம்பளம் குறைந்திருப்பதை உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ரூ 9 கோடி செலவில் எல்லா ஆசிரியர்களின் சம்பளத்தையும் அவர்கள் எந்தெந்த ஸ்தாபனங்களில் வேலை செய்தாலும் மத்திய ஆலோசனை போர்டார் சிபார்சு செய்த குறைந்த அளவு சம்பளம் அளிக்கப்படும்.

சுகாதாரத்திட்டம்

(சுகாதாரத்தைக் குறித்து சென்னை சர்க்கார் செய்திருக்கும் திட்டங்கள் மத்தியசர்க்காரின் அறிக்கைகளுக்குப் பின் சில மாற்றங்களுக்குள்ளாகலாம்)

தற்போதுள்ள திட்டம் 20-வருட திட்டம், இம்மாகாணம் முழுவதிலுமுள்ள கிராமங்களுக்கு நியாயமான தூரத்திற்குள் ஒரு கிராமாந்திர வைத்திய ஆஸ்பத்திரியும் ஒவ்வொரு 10,000 முதல் 13,000 மக்களுக்கு ஒரு சுகாதார சென்டரும் இருக்கும். ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் பிரசவத்திற்காக 4 படுக்கையும் அவசர கேஸ்களுக்காக 2 படுக்கையும், ஒதுக்கிவைக்க வேண்டிய நோயாளிக்காக 2 படுக்கையும், ஆக 8 படுக்கைகள் இருக்கும். ஒவ்வொரு தாலூகா தலைமை இடத்திலும் முழு சாதனங்களும், 50 முதல் 100 படுக்கைகளும், ஸ்பெஷல் டிபார்ட்மெண்டுகளும், க்ஷயம், குஷ்டம், மேகம், கண்ரோகம் முதலியவைகளுக்குத் தனி சிகிச்சை வசதிகளும் இருக்கக்கூடிய ஆஸ்பத்திரி இருக்கவரும்.

ஜில்லா தலைமை ஆஸ்பத்திரிகளில் பல் நிபுணர் முதல் விசேஷ வைத்திய நிபுணர்கள் இருப்பார்கள். ஆலைகளில் முதல்தரமான பரிசீலனை அறையும், எக்ஸ்ரே இலாகாவும், கம்பவுண்டர்கள், நர்ஸுகள் பயிற்சி வசதியும் இருக்கும். மேலும் தொத்துநோய் சிகிச்சை வசதியும் இருக்கும்.

இத்திட்டத்தின்படி 1487 புதிய வைத்தியசாலைகளும் 177 புதிய தாலூகா தலைமை ஆஸ்பத்திரிகளும் நிறுவப்படும். ஜில்லா தலைமை ஆஸ்பத்திரிகளை அபிவிருத்திசெய்து அல்லது திருத்தியமைக்கப்படும்.

முதல் 5-வருடத்தில் 270 கிராம சென்டர்களும், 40 தாலூகா தலைமை ஆஸ்பத்திரிகளும் கட்டவும், முழுவசதியுள்ள நிலைமைக்கு 3 ஜில்லா ஆஸ்பத்திரிகளை உயர்த்துவது.

எல்லா கிராம சென்டர்களிலும், தாலூகா, ஜில்லா ஆஸ்பத்திரிகளிலும் நோய்களைத் தடுக்கும் முறைகளும், தீர்க்கும் முறைகளும் கையாளப்படும். இதற்காக சுகாதார இலாகாவைப் பெருக்கப்படும்.

க்ஷயரோக சிகிச்சைக்கு தாம்பரம், பெருந்துறை ஆஸ்பத்திரிகள் போதுமானதாயில்லாததால், மேற்கொண்டு 3 புதிய ஆஸ்பத்திரிகள் நிறுவப்படும். முதல் 5 வருடத்தில் ஆந்திர ஜில்லாக்களில் வால்டேரில் ஒன்று கட்டப்படும்; தவிர இப்போதுள்ள 2 ஆஸ்பத்திரிகளிலும் 100 அதிகப்படி படுக்கைகள் போடப்படும்.

குஷ்டரோகத்தையும் மலேரியாவையும் ஒழிக்க திட்டம் போடப்பட்டிருக்கிறது. சென்னையிலும் விசாகையிலுமுள்ள பயிற்சிசாலைகளை விருத்தி செய்யப்படும். கிண்டி கிங் இன்ஸ்டிட்யூட்டை விஸ்தரிக்கவும் மேலும் 6 பிரதேச ஸ்தாபனங்கள் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

பொது சுகாதார விஷயமாக தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் கவனம் செலுத்தப்படும்.

உள்ளூரில் கிடைக்கக்கூடிய உணவுப் பொருள்களிலிருந்து உடலுக்குத் தேவையான போஷணை சத்துள்ள பொருள்களை தெரிவிக்க உதவி சுகாதார அதிகாரி நியமனம் செய்யப்படுவார். கக்கூஸ் முதலிய வசதிகளைப்பெருக்க அந்தந்த சாமான்கள் செய்ய தொழிற்சாலைகள் நிறுவி உற்பத்தி செய்யப்படும்.

குடி தண்ணீர் சப்ளை

10-வருடங்களில் மாகாணத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் சுத்தமான குடிதண்ணீர் சப்ளை முறை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதனால் பல நோய்கள் தடுக்கப்படலாம் என்று நம்பப்படுகிறது. யுத்தம் காரணமாக முதல் ஐந்து வருடத்தில் நின்றுபோன பழைய திட்டத்தில் பாதியை ரூ 2½ கோடி செலவில் நடைமுறையில் கொண்டு வரவும், பாக்கியை மறு 5 வருடங்களில் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 82 நகர சபைகளும் 167 சிறிய நகரங்களும் கொண்ட அர்பன் பிரதேசத்திற்குக் குடி தண்ணீர் சப்ளைசெய்ய 20 வருட திட்டமொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. முதல் 5-வருடத்தில், இப்பொழுது செய்து முடிக்கவேண்டிய வேலைகளையும் ரூ 3.75 கோடி செலவில் செய்து முடிக்கப்படும். 5 வருடக் கடைசியில் 60-தண்ணீர் சப்ளை திட்டங்களும் 21-நீர்க்கழிவு திட்டமும் செய்து முடிக்கப்படும்.

பகுத்தறிவு வால்யூம்

விற்பனைக்குத் தயார்

1937ஆம் வருட பகுத்தறிவு பைண்டு வால்யூம் விற்பனைக்குத் தயார் ஆகிவிட்டது. ('37 ஜூன் முதல் '38 ஏப்ரல் வரையுள்ள புத்தகங்களில் '37 மே மாதம் புத்தகம் நீக்கி 11-புத்தகங்கள் கொண்ட வால்யூம்) விலை ரூ. 1-12-0. தபால் செலவு வேறு. (புக்போஸ்டில் அனுப்ப 6 அணா. ரிஜிஸ்தர் புக்போஸ்டில் அனுப்ப 9-அணா)

'38 மே முதல் '39 ஜனவரி முடிய 9-மாதங்கள் கொண்ட பைண்டு வால்யூமுக்கு விலை ரூ. 1-8-0. தபால் செலவு தனி. (புக்போஸ்டில் அனுப்ப 5-அணா. ரிஜிஸ்தர் புக்போஸ்டில் அனுப்ப 8-அணா)

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

திராவிட நாட்டுச் செய்திகள்

வெங்கட்டாபுரம் தோழர் ஆர். நாவலடி அவர்கள் தம்மை லண்டன் எலக்டிரிகல் இஞ்சினீரியங் ஸ்தாபனத்தில் ஒரு மெம்பராக தெரிந்தெடுத்தமைக்கு 'குடி அரசு'க்கு நன்கொடையாக ரூ. 1 அளித்துள்ளார்.

* *

தாராவி (பம்பாய்)யில் தோழர் பி. எம். பரம்-புஷ்பவதியம்மாளுக்கு 23-3-45ல் பிறந்த பெண் குழந்தைக்கு 'ஜெயசீலி" எனப்பெயரிடப்பட்டு இதன் நினைவாக பம்பாய் திராவிடர்கழக பகுத்தறிவு நிலையத்திற்கும் "குடி அரசு" வளர்ச்சிக்கும் முறையே ரூ. 2 நன்கொடையாக அளிக்கப்பட்டது.

* *

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 53-வது வருட பிறந்தநாள் கொண்டாட்டம் 16-4-45 முதல் 22-4-45 வரை வாகனேரி பென்ஷனர்த் தெரு, வாகனேரி குளுவி தெரு, தேவஸ்தானம், மார்சின் பேட்டை, காசாப்பேட்டை முதலிய இடங்களில் முறையே பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன.

22-4-45 ஞாயிறு அன்று மாலை 7 மணிக்கு திருச்சி நகர மண்டபத்தில் ஷெ. பெடரேஷன் தலைவர் தோழர் சாம் சிங்காரம் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் டி. பி. வேதாச்சலம், ஜனாப் சுல்தான் பக்ஷி, (சமரசம் ஆசிரியர்) பி. சிவபிச்சை ஆகியோர் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் அரும் பெரும் குணங்களையும் மக்களுக்கு அவர் ஆற்றிடும் சேவைகளையும் பாராட்டிப் பேசினார்கள்.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42 Cutchery street, Erode.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை